பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

24 10 2024 **THURSDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) நாட்டை பாதுகாக்கும் அரணாக அர்ப்பணிப்பு உணர்வுடன் இந்திய – திபெத்திய எல்லை காவல்படையினர் செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2) ஜெர்மனி பிரதமர் திரு **Olaf Scholz** மூன்று நாள் அரசு முறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

3) டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகளில் கிராமப்புற மக்கள் ஆர்வம் காட்டி வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

4) மகப்பேறு சேவை கட்டமைப்பை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தமிழக அரசு கூறியுள்ளது.

5) 23 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த போட்டியில் இந்தியாவின் விஷ்வஜித் மோர் வெண்கலப்பதக்கம் வென்றார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<>>>>>**

இந்திய – திபெத்திய எல்லை காவல்படை உருவான தினத்தையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்நாளையொட்டி அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், நாட்டை பாதுகாக்கும் அரணாக அர்ப்பணிப்பு உணர்வுடன் அப்படை வீரர்கள் செயல்பட்டு வருவதாகவும், மிக சவாலான சூழல்களில் அவர்கள் பணியாற்றி வருவதாகவும் கூறியுள்ளார்.

தேசிய பேரிடர்களின்போது மீட்புப்பணிகளில் மிக சிறந்த முறையில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நாட்டின் பாதுகாப்பில் அளப்பரிய பங்களிப்பை இந்திய – திபெத்திய எல்லை காவல்படையினர் வழங்கி வருவதாக தெரிவித்துள்ளார்.

இத்தினத்தையொட்டி மத்திய அமைச்சர்கள் திரு அமித் ஷா, திரு தர்மேந்திர பிரதான் உள்ளிட்ட பல தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

<<<<<>>>>>>

ஜெர்மனி பிரதமர் திரு **Olaf Scholz,** மூன்று நாள் அரசு முறைப் பயணமாக இன்று மாலை இந்தியா வருகிறார்.

நாளை தில்லியில் நடைபெறும் 7-வது இந்திய – ஜெர்மன் இடையேயான ஆலோசனை கூட்டத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடியுடன் இணைந்து அவர் பங்கேற்கிறார்.

பாதுகாப்பு, பொருளாதாரம், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து இரு தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர்.

ஜெர்மன் வர்த்தகத் துறை நடத்தும் 18வது ஆசிய பசிபிக் மாநாட்டிலும் இரு தலைவர்களும் நாளை பங்கேற்கின்றனர்.

இந்தியா, ஜெர்மனி மற்றும் பிற நாடுகளைச் சேர்ந்த 650 முன்னணி வணிகத் துறைப் பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர்.

தமது இந்தியப் பயணத்தின் போது ஜெர்மன் பிரதமர், கோவாவுக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

<<<<<>>>>>>

டிஜிட்டல் இந்தியா இயக்கத்தை முன்னெடுக்கும் வகையில் கிராமப்புற மக்கள் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகளில் அதிக ஆர்வம் காட்டி வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

திருவாரூரில் உள்ள மத்திய பல்லைக்கழகத்தில் இன்று நடைபெற்ற கருத்தரங்கை தொடங்கிவைத்து அவர் உரையாற்றினார்.

திருவள்ளுவர் காட்டிய வழியில் அனைவரும் மாசற்ற மனதோடு வாழ வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

தமிழக கோவில்கள் மற்றும் பாரம்பரிய இடங்களின் சிறப்புகளை இக்கருத்தரங்கில் கலந்துகொண்ட ஆராய்ச்சியாளர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

<<<<<>>>>>

சுதந்திரப்போராட்ட வீரர்கள் மருது சகோதரர்கள் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது

இதையொட்டி மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், சுதந்திர வேட்கையை அவர்கள் மக்களிடம் விதைத்ததாகவும், அவர்களது வீர தியாகங்களை போற்றுவோம் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நாளையொட்டி, சென்னை கிண்டியில் உள்ள முருது சகோதரர்களின் திருவுருவச்சிலைகளுக்கு மாநில அமைச்சர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

<<<<<>>>>>

உலக போலியோ ஒழிப்புதினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

போலியோ தடுப்பு மருந்தை உருவாக்கிய **Jonas Salk-**ன் பிறந்த தினத்தை நினைவுகூறும் வகையில் இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது.

போலியோவை முற்றிலும் ஒழிக்கும் நோக்கில் அதுகுறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், உலகம் முழுவதும் இன்று இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இதையொட்டி, தமிழகத்தின் தூத்துக்குடியில் போலியோ ஒழிப்பு தின விழிப்புணர்வு பயணம் இன்று மேற்கொள்ளப்பட்டது.

இதில், தன்னார்வலர்கள், போலியோ பாதிப்புக்குள்ளானவர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

போலியோவை முற்றிலும் அகற்றும் வகையிலான நடவடிக்கைகளை மக்கள் முன்னெடுக்க வேண்டும் என்று அதில் பங்கேற்றவர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் - பங்கேற்பாளர்கள் - 66 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>>

வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள டானா புயல் தீவிர புயலாக வலுவடைந்துள்ளதாகவும், ஒடிஷாவின் பிதர்கனிகா - தமரா இடையே இன்று இரவு தொடங்கி நாளை அதிகாலை வரை கரையைக் கடக்கக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புயல் கரையை கடக்கும்போது மணிக்கு 100 முதல் 120 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

ஒடிஷாவின் கேந்திரபாரா, பாலாசுர், மயூர்பஞ்ச் உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களில் இயல்புக்கு மாறாக மிக அதிக அளவில் கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதையொட்டி ஒடிஷாவில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பகுதிகளிலும் மேலும் 9 மாவட்டங்களிலும் தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையினர் தயார் நிலையில் உள்ளனர்.

பாதிக்கப்படக் கூடிய பகுதிகளில் வசிக்கும் சுமார் 10 லட்சம் மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் 6 ஆயிரம் நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் ஒடிசா அரசு கூறியுள்ளது.

புயல் எச்சரிக்கையையடுத்து, ஒடிஷாவில் உள்ள அனைத்து பள்ளிகள், கல்லூரிகள், அத்தியாவசிய சேவைகள் தவிர்த்த இதர அரசு நிறுவனங்களுக்கு நாளை வரை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேற்கு வங்க மாநிலத்திலும் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

டானா புயல் காரணமாக புவனேஸ்வர் மற்றும் கொல்கத்தா விமான நிலையங்களில் விமான சேவைகள் இன்று மாலை முதல் நாளை காலை வரை நிறுத்தி வைக்கப்பட்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு ரயில் சேவைகளும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

ரயில்வே சார்பில் ஒன்பது அவசரகால செயல்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக ரயில்வேத்துறை தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

மகப்பேறு சேவை கட்டமைப்புகளை மேம்படுத்தும் நோக்கில் தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - மா. சு. – 44 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

23 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த போட்டியில் இந்தியாவின் விஷ்வஜித் மோர் வெண்கலப்பதக்கம் வென்றார்.

அல்பேனியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 55 கிலோ எடைப்பிரிவில், அவர், அஜர்பைஜானின் **Ulbashev**–வை வென்றார்.

மகளிர் 59 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் **Anjli** இறுதி போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

அரையிறுதியில் அவர் இத்தாலியின் **Russo**-வை வென்றார்.

<<<<<>>>>>

இந்தியா – நியூசிலாந்து இடையேயான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்கியது.

புனேயில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்துவரும் நியூசிலாந்து அணி சற்றுமுன்வரை---- விக்கெட் இழப்பிற்கு ---ரன் எடுத்துள்ளது.

**<<<<<>>>>>>**

இந்தியா – நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டி இன்று அகமதாபாதில் நடைபெறுகிறது.

இப்போட்டி பிற்பகல் மணி 1.30-க்கு முப்பதுக்கு தொடங்குகிறது.

**<<<<<>>>>>>**

வியன்னா ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா – ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் இணை, இன்று, அமெரிக்காவின் நீல் - நியூசிலாந்தின் மைக்கேல் இணையை எதிர்கொள்கிறது.

**<<<<<>>>>>>**

உலக டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் மணிக்கா பத்ரா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

பிரான்சின் **Montpellier**-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 11-4, 11-8, 12-10 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **Lily Zhang**-ஐ வென்றார்.

**<<<<<>>>>>>**

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீவள்ளி ராஷ்மிகா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<<<<<>>>>>>

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருதுஜா போஸ்லே காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இந்தியா – ஜெர்மனி இடையேயான இரண்டாவது ஹாக்கிப்போட்டி இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.

<<<<<END>>>>>